[1995 நவம்பர் 10

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இந்த ஆண்டே ஆரம்பிக்கப்படும்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்று கூறியதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, மகளிராகப் பிறப்பிப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும் அம்மா என்பார்கள். அப்படி இந்த மண்ணிலே பிறந்த மகளிருக்கு சிறப்பு இல்லாமல் இருந்ததை மாற்றி இன்றைக்கு எல்லா துறைகளிலேயும் 30 விழுக்காடு அரசு பணி கொடுக்க வேண்டும் என்ற ஆணையை வழங்கி, அதுவும் குறிப்பாக காவல் துறையிலேயே கூட, 30 விழுக்காடு பணிகொடுக்க வேண்டும் என்று ஆணையிட்டு, இந்தியத் துணைக்கண்டத்திற்கே வழிகாட்டுகின்ற ஒரு முதல் அமைச்சராக மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, கிருஷ்ணகிரி அருகில் இருக்கின்ற பல துறைகளிலேயும் பணியாற்றுகின்றவர்களுக்கு நல்ல ஒரு வாய்ப்பாக இதை உருவாக்கிக் கொடுப்பதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டு அது எந்த இடத்திலே அமைய இருக்கிறது. எந்த அளவு மதிப்பீட்டிலே அது இயங்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மகளிருக்கென ஆரம்பிக்கப்படுகின்ற விடுதிகள் முழுவதும் நகர்ப்புறங்களிலேயே இருக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அப்போதுதான் அவர்களுக்கு போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்த முடியும் என்கின்ற அடிப்படையில் கிருஷ்கிரியில் நகர்ப்புறத்திலேயே ஆரம்பிப்பதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. இதன் மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 39.83 லட்சம். மத்திய அரசின் சார்பாக ரூபாய் 29.87 லட்சத்தை மானியமாக வழங்கியிருக்கிறார்கள். 12 சதவீதத்தை தாட்கோ நிறுவனம் வழங்கியிருக்கிறது. ஆகவே, இவற்றைக் கொண்டு இந்த ஆண்டே அந்த மகளிர் விடுதி கட்டுவதற்கான பணிகள் துவங்கப்பட்டு கொண்டிருக்கின்றன. இதிலே 100 மகளிர் தங்கி பயன் அடையக் கூடிய வகையில் அந்த விடுதி கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1995 நவம்பர் 10]

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் விடுதிகளில் தனியார் துறைகளிலே பணியாற்றுகின்ற மகளிருக்கும் இடம் ஒதுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தத் துறையிலே பணியாற்றினாலும் அந்த மகளிருக்கு அந்த மகளிர் விடுதியிலே தங்குவதற்கான இடம் ஒதுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 90, திரு. சி. குழந்தைவேலு, மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்.

90—

பிற்பட்டோர் நல விடுதிகளில் மாணவர்கள் எண்ணிக்கையை உயர்த்துதல்

**25348—திரு. சி. குழந்தைவேலு:*

மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதியில் உள்ள இலுப்பூர், விராலிமலை, கீரனூர் போன்ற இடங்களில் உள்ள பிற்பட்டோர் நல விடுதிகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குளத்தூர் தொகுதியில் உள்ள இலுப்பூர், விராலிமலை, கீரனூர் ஆகிய இடங்களில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில் உள்ள மாணவர்கள் எண்ணிக்கையை மேலும் உயர்த்த வாய்ப்புகள் இல்லை.

திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் உள்ள இலுப்பூர், விராலிமலை, கீரனூர் போன்ற இடங்களில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் நல விடுதியில் வருடா வருடம் விண்ணப்பிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு வருகிறது. அப்படி அதிகரிக்கும் நிலையில் அங்குள்ள மாணவர்களுக்கு இடம் கிடைக்காத நிலையில், மாணவர்கள் விடுதியில் இடம் இல்லாததால் பல கல்வி நிலையங்களில் படிப்பவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. ஆகவே, மாண்புமிகு

அமைச்சர் அவர்கள் மேற்படி மாணவர் விடுதியிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்தியமைக்க ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீரனூர் மாணவர் விடுதியினுடைய மாணவர்களின் எண்ணிக்கை *50*-ஆக இருந்தது. அது *55*-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. விராலிமலையில் அங்கீகரிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை *100*. இலுப்பூரில் அங்கீகரிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை *50*. இந்த மாணவர்களுடைய எண்ணிக்கையை அங்கீகரிப்பதில் தேவையான அளவு அந்த விடுதிகளிலே மாணவர்களுக்கு வசதிகள் செய்வதற்கு முடியாமல் இருக்கிறது. இந்த விடுதிகளை ஆய்வு செய்து பார்த்ததில் அதிகமாக மாணவர்களைச் சேர்த்தால், மாணவர்கள் தங்குவதற்குத் தேவையான இடவசதிகள் மற்றும் பல்வேறு வசதிகள் இல்லாமல் இருக்கிற காரணத்தினால் மேலும் மாணவர்களைச் சேர்க்க இயலாமல் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் *10.45*

திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களின் நலனில் அதிக அக்கறை கொண்ட இந்த அரசு கூடுதலாகக் கட்டிடங்களைக் கட்டி அங்கே மாணவர்களைச் சேர்க்க ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விடுதிகளைப் பொறுத்தவரையில் *10* சதவீதம் மாணவர்களை அதிகப்படுத்துவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது. எனவே, கீரனூர் மாணவர் விடுதியில் கூடுதலாக ஆறு மாணவர்களையும், விராலிமலை மாணவர் விடுதியில் மேலும் *10* மாணவர்களையும், இலுப்பூர் மாணவர் விடுதியில் *5* மாணவர்களையும் சேர்த்துக் கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவருக்கே அதிகாரம் இருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகுவார்களேயானால் அந்த விடுதிகளின் வசதிகளுக்கு ஏற்ப தேவையான மாணவர்களை அங்கே தேவையான அளவுக்கு அமர்த்துவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வார்கள். புதிதாகக் கட்டிடங்கள் கட்டுவதற்குப் பல்வேறு விதிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அந்த விதிகளின் அடிப்படையில் அங்கே புதிதாகக் கட்டிடங்கள் கட்ட வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.